மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தமிழகத்தில் 10 படி அரிசி வரை எடுத்துச் செல்வதற்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அந்த உரிமையைக் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் விஸ்தரிப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, உணவுப் பொருள் போக்குவரத்தைக் கண்காணிக்கும் பொருட்டு தற்போது இருக்கும் செக் போஸ்ட்டுகளில் கண்காணிப்பாளர்களை நிரந்தரமாகப் போடாமல் மாறி மாறி பணியாற்றும்படி ஏற்பாடு செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தவறு ஏற்படாமல் இருக்க கனம் அங்கத்தினர் சொன்ன யோசனையை அரசு எடுத்துக் கொள்ளும்.

திரு. கே. பி. எஸ். மணி : சார், இந்த கடத்தல் குற்றங்கள் அதிகமாகிற காரணத்தால்—ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு, தற்போது அரிசி எடுத்துச் செல்வதற்குத் தடை இருக்கிறது, அந்தத் தடை இருப்பதன் காரணமாகத்தான் கடத்தல் குற்றங்கள் அதிகமாகிறது என்று மக்கள் கருதுகிறார்கள். ஆகவே—அரிசியை ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்குள்ள தடையை அகற்ற அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மாவட்டத்திற்கு மாவட்டம் அனுப்பலாம் என்ற முடிவுக்கு அரசாங்கமே வருமானல் கள்ளக்கடத்தல்காரர்களுக்கு இது வசதியாகப் போகும். இப்பொழுதே கேரளப் பகுதிக்கு கடத்திச் செல்லக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. இந்த நிலையில் அதற்குச் சாதகமாக மாவட்டத்திற்கு இடையேயுள்ள தடையை நீக்கி விட்டால் சுலபமாகக் கடத்தல் செய்ய வாய்ப்பு ஏற்பட்டு விடும்.

* 421 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :
திரு. பி. வேலுசாமி : } மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரிசி, மிளகு போன்ற உணவுப் பொருள்களில் கலப்படம் செய்யத் தக்க வகையில் கல், களிமண் இவைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நடத்தப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அவற்றின் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

1967 நவம்பர் 24]

• திரு. வி. கே. கோதண்டராமன் : சார், முதலமைச்சராக இருந்த உயர்திரு பக்தவத்சலம் அவர்களே பிரான்சு தேசத்திற்கு மிளகு அனுப்புவதிலே களிமண் கலப்படம் செய்திருப்பதைப் பற்றிக் கண்டித்து ஒரு அறிக்கை வெளியிட்டார். அதே போல விலைவாசி உயர உயர கலப்படமும் உயர்ந்து கொண்டே இருக்கிறது. அந்த அடிப்படையிலே தான் இன்றைக்கு—எப்படி கள்ள நோட்டு அடிக்கப்படுகிறதோ—அதே போல கலப்படத்திற்குக் கல் போன்ற பொருள்களும் தயார் செய்யப்படுகின்றன. அதைக் கட்டுப் படுத்துவதற்குச் சர்க்கார் உடனடியாக முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இத்தகைய காரியங்கள் அரசாங்கத்தினுடைய அனுமதி பெற்று நடைபெறுவது கிடையாது. கள்ளத் தனமாகத் தான் இவை நடத்தப் படுகின்றன. கனம் அங்கத்தினருக்கு ஏதாவது தகவல் இருந்தால் தயவு செய்து உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. வேலுசாமி : ஐயா, கலப்படம் செய்வதற்கே இருப்பிடமாகக் கொள்வதற்கு விருதுநகர் என்று ஒரு ஊர் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அந்த ஊரில் எத்தனை கேஸ்கள் பிடிக்கப் பட்டன ? எத்தனைப் பேருக்குத் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது ?

திரு. இராம. அரங்கண்ணல் : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், தயவு செய்து அந்தக் கேள்வியை நம்முடைய குறிப்புப் புத்தகத்திலிருந்து நீக்கி விடவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினருடைய கேள்விக்கு விளக்கம் அளிக்கும் முறையிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதுமாதிரி மதுரை மாவட்டத்திலிருந்து கலப்படம் செய்வதாக ஒரு தகவல் கிடைத்தது. அது பற்றி மத்திய சர்க்கார் கேட்டது. மதுரை மாவட்ட கலெக்டரையும் கேட்டோம், அவர் அங்கு சோதனையிட்டு அதற்கு ஆதாரம் கிடைக்கவில்லை என்றார். இராமநாதபுரத்திலும் அத்தகைய சோதனைகள் நடத்திப் பார்த்ததில் அரசாங்கத்திற்கு அதுபோன்ற எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. இராமநாதபுரம் மாவட்டத்திலேயே விருதுநகரும் இருப்பதால் விருதுநகரைப் பற்றித் தனியாகக் கேட்பது அவ்வளவு நல்லதல்ல என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் கூறிவிட்ட காரணத்தால் இதை நடவடிக்கை குறிப்பிலிருந்து எடுக்கத் தேவையில்லை.

Dr. H. V. HANDE : Sir, it is a fact that we are getting white stones when white rice is supplied and black stones when black rice is supplied. This has been going on for the last several years. So, may I request the Hon. Minister to find out where this cottage industry is? The mixing of stones with rice has become a cottage industry and it is not a big industry. So, will the

Government appoint a high Police official to find out exactly where this cottage industry is located and see that this sort of thing is prevented?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த அரிசியைச் சாப்பிட்டதனுல் பல் போனதாகச் சொல்கிருர்கள். டாக்டருக்கே இந்தக் கதியானுல் மற்றவர்களுக்கு எப்படி என்று சொல்ல வேண்டியதில்லை. அவர் எந்தக் கடையில வாங்கினுர் என்று சொன்னுல் நானே பரிசிலனை செய்து அந்த மாதிரிக் கற்களை அரிசியில் கலந்து கொடுக்கின்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Courts

* 422 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that Courts of both Madurai and Ramanathapuram districts are housed now in Tirumalnaick Palace, Madurai; and

(*b*) if so, the arrangements made to shift them to new and safer buildings both at Madurai and at Ramanathapuram towns?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) ஒரேயிடத்தில் தகுந்த கட்டிடங்கள் கிடைக்கும் வரை, தற்போது திருமலைநாயக்கர் மஹாலில் உள்ள நீதிமன்றங்களை தனியார் வாடகைக் கட்டிடங்களுக்கு மாற்றுவது ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது. மதுரையில் "செங்குளம்" குளக்கரையில் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் நீதிமன்றங்களை ஒருசேர இணைத்து ஒரே நீதிமன்றமாக அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

திரு. கே. விநயகம் : மதுரை மாவட்ட நீதிமன்றமும் இராம நாதபுரம் மாவட்ட நிதிமன்றமும் ஆகிய இரண்டுமே இப்பொழுது திருமலைநாயக்கர் மஹாலில் இருப்பதாகவும், அந்த மஹால் இப்பொழுது ஏதோ ஓட்டை அடைந்து விட்டதனுலே, அது கூட, 'அன்ஃபிட் ஃபர் ஹௌஸிங் தி கோர்ட்ஸ்' என்று சொல்லி, அந்த இரு நீதி மன்றங்களையும் மதுரையில் ஏதோ ஒரு வாடகைக் கட்டிடத்திலே வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டோம். இராமநாதபுரம் மாவட்ட நீதி மன்றத்தை இராமநாதபுரத்திலேயே வைக்க, இராமநாதபுரத்தில் வாடகைக் கட்டிடம் கிடைக்காதா ? ஏன் இது பல ஆண்டுகளாக மதுரை மாவட்டத்திலேயே இருக்கிறது ? அது மாதிரி இருக்க வேண்டுமென்ற நியதி இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த எல்லா நீதிமன்றங்களும் மதுரையில் இல்லை. மாவட்ட நீதி மன்றம் ஒன்று இருக்கிறது. சில பகுதிகளுக்குத் துணை நீதி மன்றம் ஒன்று இருக்கிறது. புதிய துணை நீதி மன்றம்